அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 308/2018

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 06-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 06.03.2026 |
| பெயர் மகேந்திரன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-

1. வழக்கு சொத்து மின் இணைப்பு சம்மந்தமாக எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சணை ஏற்பட்டதா என்றால் இல்லை. 26.02.2026 அன்று மின்இணைப்பு சம்மந்தமாக உதவி பொறியாளர் TNHB ஆவடிக்கு அசோசியேசன் உறுப்பினர்கள் கடிதம் எழுதி மின்வயரை அகற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள் என்றால் மின்இணைப்பு பிரச்சணை இருக்கும் சர்வே எண் 779 ஆகும், அது என்னுடைய எண் கிடையாது. தாவா சொத்து சர்வே எண் 774 ஆகும். சர்வே எண் 779 சொத்து சர்வே எண் 774 க்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 779/1 தான் தாவா சர்வேய எண்ணுக்கு அருகில் உள்ளது.

2. என்னிடம் காட்டப்படும் மின்இணைப்பு பெட்டி எந்த சர்வே எண்ணில்

உள்ளது என்றால் அந்த மின்இணைப்பு பெட்டி சர்வே எண் 774 கானது. அது அந்த மின்கம்பத்திற்கு கீழ் இருக்கும். நான் இந்த வழக்கு வழிபாதை சம்மந்தமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமித்துள்ளேனா என்றால் இல்லை. அ.வ.எண் 582/2004 ல் பிரதிவாதியின் தந்தை தாக்கல் செய்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் மனுசெய்து நியமிக்கப்பட்டது. இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக அ.வ.எண் 132/2017 வழக்கிலும் வழக்கறிஞர் ஆணையர் மனுசெய்து நியமிக்கப்பட்டது. அ.வ.எண் 132/2017 வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

3. அ.வ.எண் 132/2017 வழக்கில் இந்த வழக்கில் அதே முகாந்திரத்தை தான் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அண்ணன் வழக்கறிஞர் என்பதால் 5 வழக்குகள் தாக்கல் செய்து 2 வழக்குகள் முடிந்துவிட்டது என்றாலும் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையர் நியமித்தால் தான் வழக்கின் சரியான முடிவு காணமுடியும் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.